

இத்தாவில், பளையை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும்கொண்ட

# திரு. செல்லையா மார்க்கண்டு

அவர்களின்

# ஞாபகார்த்த வெளியீடு

23.12.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இத்தாவில், பளையை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும்கொண்ட

அமரர்

## திரு. செல்லையா மார்க்கண்டு

அவர்களின்

# ஞாபகார்த்த வெளியீடு

## 23.12.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஆலவிருட்சம்
அன்போடும் பண்போடும் நம்மை
வளர்த்து ஆளாக்கி இறுதிவரை
நமக்கு சிறந்த வழிகாட்டியாக
இருந்த எமது அன்புத் தெய்வம்
அமரர்
திரு.செல்லையா மார்க்கண்டு
அவர்களின்
நினைவாக இம்மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணில்
16.04.1940

விண்ணில்
23.11.2023

அமரர்

# திரு. செல்லையா மார்க்கண்டு

திதிவெண்பா

ஆண்டழுகு சோபகிருது கார்த்திகை ஏழுதனில்
பூர்வபட்ச ஏகாதசி திதியில் – செல்லையா
மார்க்கண்டு நல்லான் சிவப்பேறு ஏகினான்
வெள்ளி யம்பலத்தான் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை
நான்கும் கலந்து உனக்கு நான் தருவேன்
கோலம்செய் துங்கக் கரிமுகத்து தூமணியே
நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா

## தேவாரம்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

## திருவாசகம்

அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே !!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்தே பிறக்கின்றன.
ஆனால் அனுபவமோ
தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## திரு. செல்லையா மார்க்கண்டு அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சிவாலயங்களும் வயல்களும் நிறைந்த ஈழத்திருநாட்டின் மணிமகுடமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை, மா, பலா, வாழை, சோலை மருவு பச்சிலைப்பள்ளியில் புகழ்பூத்த மரபில் உதித்த செல்லையாவுக்கும் வள்ளிப்பிள்ளைக்கும் இரண்டாவது மகனாக 1940.04.16 மார்க்கண்டு வந்துதித்தார். இவருக்கு உடன்பிறப்புக்களாக சிவக்கொழுந்து, பாலசிங்கம், சின்னம்மா ஆகியோர் வாய்த்தனர். இவர்கள் ஒருவர்மேல் ஒருவர் மிகுந்த பாசமும் ஒற்றுமையுமுடையவர்கள். இவர் எல்லோரிடமும் மிகுந்த அன்பும் அக்கறையும் உடையவர். இவர் தனது கல்வியை யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கற்றார். இவர் விளையாட்டில் மிகவும் சிறந்த மாணவராக திகழ்ந்தார். இப்படியாக வாழ்ந்து வரும் வேளையில் திருமண பருவத்தை எய்தியதும் தனது 24 வயதில் காசிப்பிள்ளை நாகமுத்து தம்பதியினரின் மூத்த மகளான அன்னலட்சுமியை 1964.05.07இல் திருமணம் செய்துகொண்டார். இறல்லறத்தில் நல்லறமாக வாழ்ந்து வரும் காலத்தில்

"மங்கலம் என்ப மனைமாட்சி
மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு" என்ற திருக்குறளுக்கிணங்க பிள்ளைச் செல்வமாக மாலினி என்னும் ஒரு மகளைப் பெற்று மகிழ்ந்தார். மகளை கண்ணின் மணியாக காத்து நல்ல அறிவுரைகளையூட்டி நல்ல கல்வியையூட்டி செல்லமாக வளர்த்தார். குடும்பத்தினரிடையே அளவுகடந்த அன்புகொண்டவர். மிகவும் கடின உழைப்பாளியான இவர் உற்றார் உறவினர் நண்பர்கள் என அனைவருக்கும் கேட்கும் போதெல்லாம் உதவிகளை அள்ளி வழங்கிய மனிதநேயம் கொண்டவர். பச்சிலைப்பள்ளியில் பல சமூக சேவைகளில் ஈடுபட்டார். இவர் 1992 - 1996 வரையான காலப்பகுதியில் பச்சிலைப்பள்ளி பலநோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தார். இதனைத்தொடர்ந்து 2011-2012 வரையான காலப்பகுதியிலும் சங்கத்தில் சேவையாற்றினார். மற்றும் தனது கிராமத்தில் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவராகவும், கிராம அபிவிருத்தி சங்க தலைவராகவும், இணங்கசபைத் தலைவராகவும், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையின் உறுப்பினராகவும், கெனடி விளையாட்டு கழக ஸ்தாபகராகவும், கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் நலன் விரும்பியாகவும் இருந்து பல சமூக சேவைகள் புரிந்தவர். இவ்வாறு வாழ்ந்துவரும் வேளையில் தனது குலதெய்வமாகிய அரசர்கேணி பெரிய தம்பிரான் ஆலயத்தில் கோயில் பணிபுரிந்துவந்தார். பின்னர் தனது மகளுக்கு மணம்முடித்துக்கொடுத்து மருமகனும் பேரப்பிள்ளை களுடனும் கொஞ்சிக்குலாவி தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். தனது பேரப்பிள்ளைகளின் மீது மிகுந்த பாசமும் அன்பும் கொண்டவர். இவ்வாறு வாழ்ந்துவரும் வேளையில் சென்ற இடமெல்லாம் சிரிப்பிற்கு பஞ்சமில்லை தன் புன்னகையால் எல்லோரையும் புன்னகைக்கச் செய்யும் நகைச்சுவை உணர்வு படைத்த உத்தம மனிதன். இவ்வாறு சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்த காலப்பகுதியில் நோயினால் பாதிக்கப்பட்டு 23.11.2023 வியாழக்கிழமை பி.ப. 01:30 மணியளவில் ஏகாதசி திதியில் இறைவனடி சேர்ந்தார். “பிறந்தவர் மடிவது இயற்கை நியதியே” என்பதை மனதில் கொண்டு அன்னாரின் ஆத்மா இறைவனோடு சங்கமமாக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க!
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க!
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க!
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாவில் கிராமத்தின் தங்கமகன் அமரர் செல்லையா மார்க்கண்டு

50 வருடங்களுக்கும் மேலான தொடர்ச்சியான சமூகப் பணியினை எமது கிராமத்துக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கும் ஆற்றிய பெருந்தகை எங்கள் மார்க்கண்டண்ணை ஆவார். நான் கல்வி பயிலும் காலங்களில் பேச்சுப் போட்டியில் பங்குபற்றி அதில் நான் வெற்றி பெற்றபோது வெற்றிக்கிண்ணத்தை அன்பளிப்பு பரிசாக வழங்கி எனது உயர்வுக்கு வழிகாட்டியதை மறக்கமுடியாது. இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் 1983 இலிருந்து நீண்டகாலம் அமரர் அவர்கள் தலைவராகவும் அவருடன் இணைந்து நான் செயலாளராகவும் இருந்து எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியது. இடம்பெயர்ந்த காலப்பகுதியில் "பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்கள் ஒன்றியம்" என்ற அமைப்பை உருவாக்கி யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மக்களின் நலன் களை மேம்படுத்த அரசாங்கத்தின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்திருந்தார். பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலேயே முதன்முதலாக இத்தாவிலில் விளையாட்டுக் கழகம் ஒன்றினை ஆரம்பித்த பெருமை இவரையே சாரும். இதாவில் கெனடி விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் என்ற பெருமைக்குரியவர் அமரர் மார்க்கண்டு அவர்களேயாவார். மீள்குடியமர்வுக் காலத்தில் அமரர் அவர்கள் எமது கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் (சுனுளு) தலைவராக இருந்து அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திரகுமார் அவர்களதும் அப்போதைய பிரதேச செயலாளர் திருமதி ப. ஜெயராணி அவர்களதும் உதவிகளைப் பெற்று காணியற்றவர்களுக்கு காணியும் வீடற்றவர்களுக்கு வீடும் நிவாரண உதவிகளும் பெற்றுக் கொடுப்பதில் அயராது பாடுபட்டு வெற்றிகண்டவர். கோயில்காடு அரசகாணியை பொதுமக்களுக்கு பங்கிட்டு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இவரால் கிராம அபிவிருத்தி சங்கத்தின்மூலம் முன்வைக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்தமையின் பயனாக கோயில்காட்டு குடியேற்றக் கிராமம் உருவானது. அமரர் மார்க்கண்டு அவர்களின் சமூகப் பணிகளில் கல்விப் பணி முக்கியமான தாகும். பாடசாலை மீள ஆரம்பிக்கும் போது அவர் என்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து ஊர்மக்களிடம் கையொப்பம் பெற்று அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையில் இருந்த என்னை எமது கிராமத்தின் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவர அவரே காரணமாக இருந்தவர்.

பாடசாலைக் காணிக்கு வழக்கு வந்தபோது அதற்குரிய ஆவணங்களைக் பெற்றுத் தந்து வழக்கில் வெற்றிபெற்று மாடிக்கட்டடங்களுடன் அனைத்து வசதிகளும் நிறைந்த பாடசாலையாக மிளிர்வதற்கும் அன்னாரது அர்ப்பணிப்பான சேவை முதன்மையானதாகவுள்ளது. இவ்வகையில் கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலையின் வரலாற்றில் அவரது சேவைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேணடியதாகும். அமரர் அவர்கள் தனது சமூகப் பணியினை எமது கிராமத்தோடு மட்டும் மட்டுப்படுத்தாமல் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பொறுப்பினையேற்று கடுமையான யுத்தம் நிலவிய காலப்பகுதியில் மக்களுக்காக அர்பணிப்புடன் சேவையாற்றினார்.

லண்டனில் உள்ள தனது உறவினர், நண்பர்களுடன் தொடர்புகொண்டு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையை ஸ்தாபிப்பதில் அவரது பங்களிப்பு முதன்மையானதாக இருந்தமை அனைவரும் அறிந்த விடயமாகும். அந்த அமைப்பின் உபதலைவராக நீண்ட காலம் தொண்டாற்றி வறுமைக் கோட்டுக்கு கீழ் இருந்த மக்களுக்கு வாழ்வதற்கு உதவகளையும் வறுமையான மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கி ஏழை மக்களின் இராட்சகராகத் திகழ்ந்தார். அமரர் அவர்களின் சமயப்பணி பற்றிப் பார்க்கையில் அரசர்கேணி பெரியதம்பிரான் ஆலயம் அம்பளவளை பழையபற்று வயிரவர் ஆலயம் போன்றவற்றின் ஊடாக தனது சமயப்பணியை முன் எடுத்துச் சென்றார். சனசமூக நிலையம் ஊடாக நவராத்திரி தினங்களில் போட்டிகள் நடாத்தி தனது செலவில் பரிசில்கள் வழங்கி ஊக்குவித்துள்ளார். இந்த வகையில் நானும் ஒர் பேச்சுப் போட்டியில் பங்குகொண்டு வெற்றி பெற்று அவரது கரங்களால் பரிசும் பெற்றுள்ளேன். எமது கிராமத்தில் இந்து மத கத்தோலிக்க மத மக்களே அன்றைய காலத்தில் வாழ்ந்தனர் கல இன மக்களும் வாழ்ந்த போதிலும் இனமத சாதி பேதமின்றி அனைவரையும் சமமாக வழிநடத்துகின்ற ஒப்பற்ற தலைவனாக அமரர் மார்க்கண்டு விளங்கினார். இதனால் எமது கிராமத்தின் மதிப்பும் புகழும் மேலோங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. இவருக்குப் பின்பு அனைத்து மக்களாலும் மதிக்கப்படுகின்ற ஓர் தலைவரைக் காணமுடியவில்லை என்றே கூறலாம் பெயரும் புகழும் மங்கிக் கொண்டு போகும் போது எமது கிராமத்துக்கு இவரது இழப்பு பேரிழப்பாகும்.

பொது வேலைகள் அனைத்திலும் மார்க்கண்டு ஐயா அவர்களும் நானும் இணைந்து கடமையாற்றிய காலங்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் தருகின்ற நாட்களாகும். அவரிடம் நேர்மை இருந்தது அவரிடம் சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தது. சுயநலம் இருக்கவில்லை அவரது கை சுத்தமாகவே இருந்தது இவ்வாறான அவரது குணாதிசயங்கள் தான் அவரோடு இணைந்து சேவையாற்ற காரணமாக இருந்தது. இவ்வாறான நல்லதொரு மனிதரை இழந்து பரிதவிக்கின்றோம். அவர் காலமானதை நம்ப முடியவில்லை. நல்லதொரு சேவையாளரை உருவாக்கித் தந்த அன்னாரது துணைவியார் மகள் மருமகன் பேரப்பிள்ளைகள் சகோதரர்கள் உள்ளிட்ட குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

திரு.க.சண்முகதாஸ்
முன்னாள் அதிபர்
கிளி/வேம்பெடுகேணி சி.சி.த.க பாடசாலை
இத்தாவில், பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாத வரம் கேட்டேன்

எம் வாழ்க்கைக்கு வடிவம் கொண்டு
இந்த வையகத்துள் வாழ்ந்த
காலத்தை நான் மறப்பேனா? நீ சொல்
என்னவனே எனைப் பிரிய மனம் வந்ததேன்?

என் வாழ்வுக்காலம் முழுவதும் எனக்கு
வழிகாட்டி என்னை முன் நடத்தி
என்றைக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்தீர்கள்
இன்று என்னைச் சோகத்தில் விட்டதேன்?

நான் முன் செல்லும் பாதையை நீர் மறந்து
நீர் முன் சென்று போனதேன் சொல்வீரோ?
உம்மை யாகத்தில் அமர்த்திவிட்டேனே
போகத்தில் வந்த முத்து மணிகள் என் செய்யும்?

காலத்தின் கட்டளையில் நீ சென்றாய்
என் கோலத்தை என் மறந்தாய்?
என்னைப் பின் விட்டு நீ முன் சென்றதும் சரியோ?
எனக்கு வழி காட்டிச் சென்றாயோ நீயிங்கு...

**அன்னலட்சுமி**
அன்பு மனைவி

அறிவு உன் தந்தை, அன்பு உன் அன்னை
அறம் உன் உடன்பிறப்பு, பொறுமை உன் மனைவி
பண்பு உன் மகள், ஆண்மை உன் மகன்
இதுவே உன் குடும்பம், இதனோடு இணைந்து வாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா நீதான் என் கோயில்

அப்பா என்னை வளமாக்க நீங்கள் பட்டபாடுகள் எத்தனை! அத்தனையும் என் கண்முன்னே நிழலாடுகின்றன. என்மேல் பொழிந்த பாசத்திற்கு அளவே இல்லை அப்பா. அப்பா என்னை யாரும் குறை கூறுவதை விரும்பமாட்டீர்களே. கல்வியிலும் மேன்மைபெற வேண்டும் என நீங்கள் கூறிய அறிவுரைகள் எத்தனை. அப்பா நீங்கள் இறைவன் அடியில் இளைப்பாறுங்கள்

மகள்
**மாலினி**

# மருமகன் உள்ளத்திலிருந்து

மாமா!
நீங்கள் மாமா இல்லை; அப்பா!
மருமகன் என்று இல்லை
மகன் போல பார்த்தீர்கள் மாமா
தொழில் கற்றுத்தந்த ஆசான் நீங்கள்
எங்கு சென்றால் உங்கள் முகம்தான்
எங்கும் தெரியுது மாமா!
இன்னும் கொஞ்சக் காலம் இருந்திருக்கலாம் மாமா!
பிள்ளை போல நாங்கள்
தூக்கி பார்த்திருப்போம் மாமா - எங்களுக்கு
சிரமம் என்று நினைத்தா மாமா
நேரத்தோடு சென்று விட்டீர்கள்!
என்றும் உங்கள் ஞாபகங்களுடன்
வாழ்வேன் மாமா!

**சாள்ரன் றோய்**
அன்பு மருமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் துயர்

நாங்கள் கும்பிடும் தெய்வமே நீங்கள்
எங்கள் பிரியமுள்ள அம்மப்பா
எமைப் பெற்ற தாயின் அன்புக்குமேல்
உங்கள் பேரப்பிள்ளைகளே நாங்கள்

தெய்வத்திருவுருவாய் எங்கள் முன்னே நீங்கள்
முல்லைக்கு தேர்கொடுத்த வள்ளல் போல்
உங்கள் அன்பைக் கொடுத்தீர்கள் எங்களிடம்
தனக்கென்று ஏதும் இல்லாது எமக்கே தந்தீர்கள்

உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பாக
எங்கள் மூச்சே காற்றாக உள் வந்ததே உங்களிடம்
பேச்சின் பெருமையே தனி அழகாய்க் கொண்டு
உங்கள் வசப்பட்டதே எம் மனம் இங்கு

உண்மையும் அன்பும் எவரிடத்தில் இருந்தாலும்
தீவினை என்ன செய்யும் பாதகன் காலன் விடுவானோ
என்றும் உங்கள் பெயர் வாழுமே இவ்வுலகில்
எம் இதயத்தில் இருப்பீர்கள் என்றும்

**கபிஷன், கபினா, கபிநயா**
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களின் ஆற்றாமை

உண்மைக்கு இலக்கணமாய்
என் உள்ளத்தில் நீயிருந்தாய்
என்றும் அன்பு மழையிலே நாம் நனைந்தோம்
இன்று எமையெல்லாம் துயர்மழையில் ஆழ்த்தியதேனோ....

என் சுமையெல்லாம் நீர் சுமந்தீரே
எமைத் தவிக்கவிட்ட காரணம்தான் ஏனோ
உம் நிழல் தேடி நாமிருப்போம் என்றும்
உம் நினைவே எனக்கு நிலையாகிவிட்டாய்

அன்புக்கும் பந்த பாசத்திற்கும் அடையாளம் நீ
என்றைக்கும் பிரியாது உந்தன் நேசம்
கண்கள் குளமாக நாம் நிற்கும் கோலம்
அணைபோட முடியவில்லையே எம் சகோதரனே!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்!

பாலசிங்கம் (கனடா)
சின்னம்மா (லண்டன்)
அன்பு சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மங்காச்சோகம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! எங்கள் மாமி!
கண்முடித் திறக்குமுன்னே எமைவிட்டு சென்றதேனோ!
நேற்றுப்போல் இருக்கிறதே
31 நாட்கள் கடந்தோடி விட்டன

நினைத்துப்பார்க்க முடியவில்லை
எமது உள்ளம் கனக்கிறது மாமி!
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள் என
எண்ணிக் கனவுகள் கண்டிருந்தோமே!

இடைநடுவில் எமைத்தவிக்கவிட்டு ஏன் மறைந்துவிட்டீர்கள்?
காலன் உங்களை காலத்தால் அழைத்தவேளை
இயற்கையின் நியதி அறிந்தும் அதனை ஏற்றுக்கொள்ள
எம் மனதால் முடியவில்லையே மாமி!

விதிசெய்த சதியென்று எம்மனது எண்ண மறுக்கிறதே
உங்கள் பெற்ற பிள்ளைகள்போல் அரவணைத்தீர்களே
எம் இதயங்களில் என்றும் அழியாத தெய்வம் நீங்கள் மாமி!
இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையென்றால்
அப்போதும் நீங்களே எங்கள் மாமியாக வரவேண்டும் என்ற
வரத்தையே வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் புலம்பல்

நீங்கள் மறைந்து ஒரு மாதமாகி விட்டது......
நீங்கள் இல்லாத உலகம் நிலவு இல்லாத வானம்போல் தெரிகிறதே..

அன்பின் சிகரமாய் ஆனந்தத்தின் மறு உருவமாய் வாழ்ந்தீர்கள்....
உங்கள் இடைவெளியை யாராலும் நிரப்ப முடியாது....
உங்களுக்கு நிகர் நீங்கள் தான் அண்ணா....

உங்கள் விடாமுயற்சியை பார்த்து பார்த்து நாங்கள் கற்றது பல....
நீங்கள் எம்முடன் பழகும் விதமும், உரிமையுடன் கூறும் அறிவுரையும், உறவினர்கள் எவரையும் விட்டுக்கொடுக்காமல் அரவணைக்கும் பண்பையும் நாம் இனி எங்கே காண்போம்...

நீங்கள் மறுபடியும் எங்கள் உறவாக வந்து பிறக்க வேண்டும்,

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஆதி வீரபத்திரர் ஆலயம் - அளவெட்டி

## அத்மசாந்தியுரை

திருவாழும் சிவபூமியாக இத்தாவிலை வதிவடமாக கொண்ட செல்லய்யா மார்க்கண்டு அவர்கள் இறைபக்தியும் நிறைந்தவர் நல் மனதுடன் நல்நோக்குடன் எல்லாரிடமும் அன்பாக பழகியவர் மாதா/பிதா/குரு/ தெய்வம் என வணங்கி அரசர்கேணி சிவாலயத்தில் மனம் நிறைந்த வழிபாட்டில் இயங்குவார். அன்னார் 1992 தொடக்கம் 1996 வரை பச்சிலப்பள்ளி பளை பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவராக இயங்கியவர்.

பின்னர் அதே கூட்டுறவு சங்கத்தில் 2011 முதல் 2012 வரை சேவைகள் புரிந்துள்ளார். தனது ஊருக்கும் பிறர்க்கும் ஆலயங்கள் வரை தன்னலம் கருதாது சேவைகள் புரியும் மனப்பாங்குடையவர். அன்னார் 23.11.2023 கார்த்திகைத் திங்கள் 7ஆம் நாள் பூர்வபட்சம் வியாழக்கிழமை ஏகாதசி திதியில் இறைபதமடைந்த நாளாகும். அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியையில் கலந்து சிறப்பித்து சிவன்தான் பணிந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

அளவையூர் பன்னாலை
ஆதி வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம்
பிரதமகுரு - உருத்திர ஜீவசங்கரக்குருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தஷஷ்டி கவசம்



## திருப்பரங் குன்றம்

### இரண்டாவது கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்-நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தன்னை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக், கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில் வாகனனார்

கையில்வேலால் எனைக் காக்க வென்று வந்து
வரவர, வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிறநிறென

வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசங் குசமும்
பரந்தவிழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரை யுங்கிலியும்
கிலியும்சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றென் முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன்நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடுநெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகு டிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோத னென்(று)

உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம் பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க

வெற்றிவேல், வயிற்றை விளங்குவேல் காக்க
சிற்றிடைய அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின் கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும்

கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒரு தலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்

சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமராவதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத், தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்

சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்

வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன், ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறு உருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலெக்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்த கையதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள் என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக் கோரரசே


மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



அறிவு உன் தந்தை, அன்பு உன் அன்னை
அறம் உன் உடன்பிறப்பு, பொறுமை உன் மனைவி
பண்பு உன் மகள், ஆண்மை உன் மகன்
இதுவே உன் குடும்பம், இதனோடு இணைந்து வாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


எங்கள் அன்பு தந்தை
அமரர் திரு. **செல்லையா மார்க்கண்டு**
அவர்கள்
23.11.2023 அன்று
இறையடி சேர்ந்த தருணம் பெரும்பிரிவால்
நாம் துயருற்றிருந்தபோது
எமக்கு பலவகைகளில் உதவிபுரிந்த
அனைவருக்கும் இத்துயரச்செய்தி அறிந்து
நேரிலும் தொலைபேசி மற்றும்
முகநூல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும்
மலர்வளையங்கள் வைத்து
அஞ்சலி செலுத்தியோருக்கும்
எமது தந்தையாரின் கிரிகைகளில் சமுகமளித்து
ஆதரவு நல்கிய அனைவருக்கும்
எம் இதயம்
கனிந்த நன்றிகள்!

**காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.



போஸ்கோ பதிப்பகம்
நல்லூர், யாழ்ப்பாணம் 021 312 6118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org